மனந்திரும்புதல் - Repentance

4 மனந்திரும்பினால் கிடைக்கும் நன்மைகள்



பொருளடக்கம்



1. நீதிக்கு வழி வகுக்கிறது

லூக்கா *18:13,14* - பரிசேயன், ஆயக்காரன்

- ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.
- அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

2. தேவனோடு ஒப்புரவாக்குகிறது

கொலோ *1:20,21*

- அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.
- முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.

துணை வசனங்கள்

- லூக் *15:20-24;* ரோம *5:10;* எபே *2:16;* *2* கொரி *5:18,19*

3. மனிதரோடு ஒப்புரவாக்குகிறது

- மத் *5:23* - சகோதரனோடு ஒப்புரவாக்குகிறது
- *1* கொரி *7:11* - உறவினரோடு ஒப்புரவாக்குகிறது
- ரோம *11:15* - ஒரு சமுதாயத்தை தள்ளிவிடாமல் நேசிக்கவைக்கிறது



4. சந்தோஷத்தை கொடுக்கிறது

- நமக்கு சந்தோஷம் கிடைக்கிறது - லூக் *10:20; 1* பேது *1:8;* கலா *5:22;* அப் *2:28;*
- முழு பரலோகமே சந்தோஷப்படுகிறது - லூக் *15:7,10*
- நம்மை மனந்திரும்ப வழிநடத்தினவர்களுக்கு சந்தோஷம் கொடுக்கிறது - *3* யோவா *3,4; 2* யோவா *1:4;* அப் *15:3*
- இயேசுவை ஏற்றுக்கொண்டால் முழு பட்டணமே, முழு கிராமமே சந்தோஷப்படும் - அப் *8:8;* அப் *13:48*

BIBLE MINUTES

5. தேவனுடைய சித்தம் நிறைவேறுகிறது

- தேவன் எல்லாரும் மனந்திரும்ப கட்டளை கொடுத்திருக்கிறார் - அப் *17:30*
- இந்த கட்டளைக்கு கீழ்ப்படியும் போது
- தேவனுடைய சித்தம் செய்கிறோம்

6. தேவனை மகிமைப்படுத்துகிறோம்

வெளி 16:9

- அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.
- இந்த வசனத்தின் மூலம் மனந்திரும்பினால்
- தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்று விளங்குகிறது

7. தேவன் குணப்படுத்தி, ஆறுதல் கொடுப்பார்

ஏசா 57:18,19 - மனந்திரும்பும் போது

- அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன்.
- தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன்; அவர்களைக் குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

8. கனிக்கொடுக்க வைக்கிறது

மனந்திரும்புதற்கேற்ற கனிகள் - அப் *26:20;* மத் *3:8*

- கனிகள் என்றால் நற்கிரியைகள்
- மனந்திரும்புதற்கேற்ற கனிகள் என்றால், எந்த விஷயத்தில் மனந்திரும்பினோமோ அது சம்பந்தப்பட்ட நற்கிரியைகள்

உதாரணம் லூக் *3:8-14*

- ஜனங்கள் - ஏழைகளுக்கு உதவுவது
- வரி வசூலிப்பவர்கள்/ஆயக்காரர் - அதிகமாய்/லஞ்சம் வாங்கக்கூடாது
- அரசு அதிகாரிகள் - மக்களை துன்புறுத்தக்கூடாது; பொய்யாய் குற்றம்சாட்டவோ, வழக்கு போடவோ கூடாது; லஞ்சம் வாங்கக்கூடாது

9. கெட்டுப் போவதை தடுக்கிறது

- லூக் *13:3* - *[*இயேசு:*]* நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்
- லூக் *13:5* - *[*இயேசு:*]* நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்

10. பாவ மன்னிப்பு கிடைக்கிறது

- லூக் 24:47 - அன்றியும் **மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்** எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.
- அப் 3:20 - உங்கள் **பாவங்கள் நிவிர்த்திசெய்ய**ப்படும்பொருட்டு நீங்கள் **மனந்திரும்பிக்** குணப்படுங்கள்.
- 2 கொரி 7:10 - தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் **இரட்சிப்புக்கேதுவான** மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.

11. பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக்கொள்ளலாம்

அப் 2:38

- பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

12. நரக தண்டனையிலிருந்து தப்புகிறோம்

- ரோமர் *6:23* - பாவத்தின் சம்பளம் **மரணம்** (நரகம்)
- வெளி *20:12-15* - ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் **இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலிலே** தள்ளப்படுவான்
- வெளி *21:8* - பாவம் செய்பவர்கள் **இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே** பங்கடைவார்கள்

முடிவுரை

- மனந்திரும்புதலினால் உண்டாகும் நன்மைகள் ஏராளம் ஏராளம் ஒரு சிலதை மட்டுமே இந்த வீடியோவில் பார்த்தோம், வேதத்தை வாசிக்கும்போது நீங்களே இன்னும் அதிகமாய் கற்றுக்கொள்வீர்கள்.
- மனந்திரும்புதலை குறித்து மேலும் அறிந்துக்கொள்ள எங்களுடைய மற்ற வீடியோக்களையும் பாருங்கள்.
- எங்களுடைய *Telegram App Channel* மற்றும் *Website*-ல் அனைத்தையும் *PDF, PPT Audio & Video* வழிவில் இலவசமாக *Download* செய்துக்கொள்ளுங்க, உங்கள் சபைகளில் பயன்படுத்துங்க.
- ஏதாவது கேள்விகள் இருந்தால் *WhatsApp* அல்லது *Email* மூலமாக தொடர்புக்கொள்ளுங்கள்.
- உண்மையான மனந்திரும்புதலை கண்டடைய தேவன் உதவி செய்வாராக



Thank You

BIBLE MINUTES

To know more, please watch other related videos from our YouTube channel or Facebook page and feel free to contact us for any further questions

By Phone / WhatsApp

+91 90190 49070
+91 76765 05599

Email

wordofgod@wordofgod.in

Social

YouTube: Bible Minutes
Facebook: Bible Minutes

Download All resources from Telegram App Channels or from our website:

https://t.me/TamilBibleStudy https://t.me/TamilChristianPDFs www.WordOfGod.in